பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 11 சனிக்கிழமை 29.10.2022 கதிர் 245

## போதைப்பொருள் வர்த்தகர்கள் 12 பேருக்கு 'சிவப்பு பிடியாணை'

வெளிநாடுகளில் இருந்துகொண்டு இலங்கையில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுவரும் 12 பேருக்கு எதிராகச் சிவப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று மேல் மாகாண வடக்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொான் பிரேமரத்ன தெரிவித்தார்.

அவர்களில் சிலர் கம்பஹா 2

### இலங்கை முழுவதும் வாழ்கின்ற

# தமிழருக்கு என்ன பிரச்சினை உண்டு?



### ராஜபக்ஷ அணிக்கு இப்படிச் சந்தேகம்

**இலங்கையின் 25 மாவட்டங்களிலும் சுதந்திரமாக வாழும் தமிழ் மக்களுக்கு உண்மையில் என்ன பிரச்சினை உண்டு? தேசிய இனப்பிரச்சினை என்று அவர்கள் எதைக் கூறுகின்றார்கள்?** 8

## 22 ஆவது திருத்தத்தால் நாட்டை மீட்க முடியாதாம்

### மஹிந்த சொல்கின்றார்

அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டம் மூலம் நாட்டை மீளக்கட்டியெழுப்ப முடியாது என்று முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவருமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

22ஆவது திருத்தம் மீதான வாக்கெடுப்பில் நான் ஏன் கலந்துகொள்ளவில்லை என்று கேள்வி தொடுப்பவர்கள் அந்தத் திருத்தச் சட்டத்தால் 8

## சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரியின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு

### யாழில் அரசியல் பிரமுகர்கள் சங்கமம்



(இ.கலையமுதன்)

சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்றது.

இதன்போது கௌரி சங்கரியின் உருவப்படத்துக்குச் சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இன்று காலை 10 மணியளவில் ஆரம்பமான நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா எழுதிய 8

## மலையகப் பாடசாலைக்கு பஸ் கையளித்தார் சஜித்



ஐக்கிய மக்கள் சக்தியின் 'பிரபஞ்சம்' எனும் திட்டத்தின் கீழ் கொட்டகலை கொமர்ல் பகுதியில் அமைந்துள்ள கேம்பிரிட்ஜ் கல்லூரிக்கு இன்று காலை பாடசாலை பஸ் ஒன்றை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வழங்கி வைத்தார்.

தமிழ் முற்போக்குக் 2


## நாம் வீழ்ந்துவிடவில்லை; இன்னமும் ஆள்கின்றோம்

### மஹிந்த வீறாப்புப் பேச்சு



எந்தப் போராட்டத்தாலும் நாம் வீழ்ந்துவிடவில்லை. நாட்டை இப்போதும் நாம்தான் ஆட்சி செய்கின்றோம். எமது கட்சிதான் இப்போதும் நாட்டை ஆள்கின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எமது பக்கமே நின்று 2

## முன்னாள் போராளிகளின் விபரம் திரட்டுகின்றது அரசு




முன்னாள் போராளிகளின் விவரங்களை முழுமையாகத் திரட்டும் நடவடிக்கை முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இடம்பெற்று வருகின்றது.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களின் விவரங்களே இவ்வாறு 2

### யாழ். பல்கலை விவசாய பீடாதிபதி

## பேராசிரியராக பதவி உயர்வு



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் பீடாதிபதி கலாநிதி சீவரட்ணம் வசந்தரூபா பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இதற்கான ஒப்புதலை பல்கலைக்கழகப் பேரவை இன்று வழங்கியது.

பல்கலைக்கழகப் பேர வையின் மாதாந்தக் கூட்டம் இன்று காலை, துணைவேந்தர் 2

## அரசியல் கைதிக்கு அரச இலக்கிய விருது

### சிறைக்குள் இருந்தவாறே 8 புத்தகங்கள் எழுதிச் சாதனை





சிறைவாசம் அனுபவித்து வரும் தமிழ் அரசியல் கைதி ஒருவருக்கு அரச உயர் விருது வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற வருடாந்த அரச இலக்கிய விருது வழங்கும் நிகழ்விலேயே அவருக்கு விருது 2

## தடைகளைத் தாண்டி அதிகாலை அமெரிக்காவுக்குப் பறந்த ரஞ்சன்



நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணத் தடை நீக்கப்பட்டதையடுத்து, ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து இன்று அதிகாலை அமெரிக்கா 2

## பேராதனைப் பல்கலை மாணவன் படுகொலை: மரண தண்டனையை உறுதிசெய்த நீதிமன்றம்

1997ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீட மாணவராக முதலாம் ஆண்டில் கல்வி கற்ற செல்வநாயகம் வரப்பிரகாஷ் என்பவரைப் படுகொலை செய்த குற்றச்சாட்டின் பேரில், அப்போதைய இரண்டாம் ஆண்டு மாணவர் ஒருவருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை, மேன்முறையீட்டு நீதிமன்றம் உறுதி செய்தது. 8

## மலையகப் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணியின் வேண்டுகோளுக்கு இணங்க, இந்த பஸ்கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம், மலையக மக்கள் முன்னணியின் தலைவர்வேலுசாமி இராதாகிருஷ்ணன், தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவர் மயில்வாகனம் உதயகுமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

கேம்பிரிட்ஜ் கல்லூரியின் அதிபரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்கத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கொட்டகலை ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற பூஜைகளைத் தொடர்ந்து பாடசாலை வாயில் வரை பஸ்ஸை ஒட்டி வந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அங்கு மாணவர்கள் முன்னிலையில் பாடசாலை அதிபரிடம் பஸ்ஸைக் கையளித்தார். மாணவர்கள் மிகுந்த ஆரவாரத்துடன் தமக்கான பஸ்ஸை வரவேற்றனர்.

பின்னர் பாடசாலையின் பிரதான மண் டபத்தில் நடன மற்றும் கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாடசாலைகளுக்கு பஸ் வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 38 ஆவது பஸ் இது என்பது விசேட அம்சமாகும்.

## பேராசிரியராக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்த கலாநிதி சீவரட்ணம் வசந்த ரூபாவின் விண்ணப்பத்தை மதிப்பீடு செய்த, மூதவையால் விதந்துரைக்கப்பட்ட துறைசார் நிபுணர்களின் மதிப்பீட்டு அறிக்கை, நேர்முகத் தேர்வு முடிவுகள் ஆகியன இன்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், விவசாய பீடத்தின் பீடாதிபதியும், விவசாய இரசாயனவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சீவரட்ணம் வசந்தரூபா விவசாய இரசாயனவியலில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

## தடைகளைத் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றார் என்று விமான நிலைய குடிவரவுத் திணைக்களத்தின் பேச்சாளர் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இன்று அதிகாலை 3.50 மணியளவில் கட்டார் ஏர்வேஸ் விமானம் ஊடாக கே.ஆர். – 663 இல் கட்டாரின் டோஹாவுக்கு ரஞ்சன் ராமநாயக்க புறப்பட்டார்.

அங்கிருந்து மற்றொரு விமானத்தில் அவர் அமெரிக்கா செல்கின்றார்.

அமெரிக்காவில் சுமார் 10 இசை நிகழ்வுகளிலும், கனடாவில் 5 இசை நிகழ்வுகளிலும் அவர் பங்கேற்கவுள்ளார். ரஞ்சன் ராமநாயக்க நேற்றுமுன்தினம் இரவு அமெரிக்கா செல்வதற்காகக் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். ஆனால், நீதிமன்றத்தால் அவருக்கு விதிக்கப்பட்ட விமானத் தடை காரணமாக மீண்டும் விமான நிலையத்திலிருந்து திருப்பி அனுப்பப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

(முன்னர் வந்த செய்தி மூன்றாம் பக்கத்தில்)

## அரசியல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டுள்ளது. சிவலிங்கம் ஆரூரன் என்ற தமிழ் அரசியல் கைதியே தான் எழுதிய நூலுக்காக இந்த விருதைப்
பெற்றுக்கொண்டுள்ளார். ஆரூரன் எழுதிய 'ஆதுரசாலை' என்ற தமிழ் நாவலுக்குச் சிறந்த நாவல் விருது வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு – பித்தலை சந்தியில் 2006 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, அவர் தற்போது சிறைவாசம் அனு பவித்து வருகின்றார். சிறையில் இருந் தவாறே, 'ஆதுரசாலை' என்ற தமிழ் நாவலை எழுதியமைக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. சிவலிங்கம் ஆரூரன் சிறைக்குள் இருந்தவாறே 8 புத்தகங்களை எழுதியுள் ளார். இந்த 8 புத்தகங்களும் அரச இலக்கிய விருது வழங்கும் நிகழ்வுக்குப் பரிந்துரை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## போதைப்பொருள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கம்பஹா மாவட்டக் குழுக் கூட்டத்தில் நேற்று கலந்துகொண்டபோதே பிரதி பொலிஸ் மா அதிபர் ரொான் பிரேமரத்ன இதனைத் தெரிவித்தார்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் நெருக்கமாகச் செயற்படுகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன என்றுஇந்தக்கூட்டத்தில்கலந்துகொண்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## நாம் வீழ்ந்து ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணியாற்றுகின்றார். – இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவருமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமைக்கு நாட்டை உலுக்கிய கொரோனாப் பெருந்தொற்றே பிரதான காரணம். இதைப் புரிந்தும் புரியாதவர்கள்போல் எம் மீது சிலர் வசைபாடி புலம்பித் திரிகின்றார்கள்.

நாடு வங்குரோத்து அடைந்தமைக்குக் கோட்டாபய ராஜபக்சவோ அல்லது ராஜபக்சக்களோ காரணம் அல்லர்.

ராஜபக்சக்கள் வீழ்ந்துவிடவில்லை. அவர்கள் பதவிகளிலிருந்து விலகி நின்று அரசை வழிநடத்துகின்றார்கள் என்பதே உண்மை.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைக்குத்தலைமைதாங்கக்கூடிய – வல்லமை பொருந்திய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான். அதில் மாற்றுக் கருத்து இல்லை.

அவரும் நாங்களும் இணைந்து நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைக் காண்போம். இதற்குக் கட்சி, பேதமின்றி அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் – என்றார்.

## முன்னாள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேகரிக்கப்படுகின்றது. நீதி அமைச்சின் கீழுள்ள தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் – பிரதேச செயலகம் இணைந்து இதனை முன்னெடுக்கின்றது.

வாழ்வாதார உதவி வழங்கவே இந்தப் பதிவு எனக் கூறப்படுகின்ற போதிலும் தகவல் சேகரிப்புக்காகவே இது இடம்பெறுகின்றது என்று முன்னாள் போராளிகளின் குடும்பத்தினர் தெரிவித்தனர். அத்துடன், இந்த நடவடிக்கையால் தாம் அச்சமடைந்துள்ளனர் என்றும் அவர்கள் கூறினர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைக் காலங்களில் பௌத்த – சிங்கள ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் – போராட்டங்கள் அதிகரித்துள்ளன.

இவற்றைத் தடுக்கும் அல்லது அவற்றில் முன்னாள் போராளிகளின் பங்கேற்பை தடுக்கும் நோக்கிலும் அவர்களைத் தொடர்ந்தும் அச்சுறுத்தி வைத்திருக்கும் நோக்கிலுமே இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது என்று முன்னாள் போராளிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## நோய்க்கு சிகிச்சை செய்க!

பாடசாலைகளில் இலவசமாக வழங்கப்படுகின்ற இஸ்லாம் பாட புத்தகங்களில் மாற்றம் செய்வதற்கு முன்னர் கடும் போக்குவாதிகளின் உள்ளங்களில் மாற்றம் வர வேண்டும் என கிண்ணியா நகரசபை உறுப்பினர் எம்.எம்.மஹ்தி தெரிவித்துள்ளார்.

“இஸ்லாம் பாடப் புத்தகங்களில் அடிப்படைவாதக் கருத்துக்கள் உள்ளன எனவும், அவை நீக்கப்பட வேண்டும் எனவும் ‘ஒரே நாடு; ஒரே சட்டம்’ செயலணி பரிந்துரை செய்தது. அதற்கு அமைவாக இஸ்லாம் பாட புத்தகங்களை அரசு மீளப் பெற்றமை ‘தலை வலிக்கு காலில் மருந்து கட்டுவது’ போன்றதாகும். இதனால் மாணவர்களின் கல்வியே பாதிப்படைந்தது.”– என்று அவர் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

’நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்’

– என்றான் திருநாப்போதகன் தெய்வத் தமிழ் மறை தந்த வள்ளுவப் பெருந்தகை.

ஒருமுறை ஒரு நோய் வந்தால், வந்த நோய் என்ன காரணத்தினால் வந்தது என்று அறிந்துகொண்டு, அந்த முறையில் மீண்டும் அந்நோய் வராமல் தடுக்கின்ற அறிவும் அது சார்ந்த கல்வியும் பெற்றாக வேண்டும் – என்பது இக்குறலின் உரை விளக்கம்.

நோய்க்குக் காரணமான மூலப் பிரச்சினைக்குத் தான் சிகிச்சை செய்ய வேண்டும். நோய் வெளிப்படுத்தும் குணங்குறிகளுக்கு அல்ல.

இலங்கையில் இன, மத, மொழிப் பிரச்சினை என்ற நோய் பரவியுள்ளது. நீங்காப் பிணி போல அது பீடித்து நிற்கின்றது.

மாறி மாறி வந்த பேரினவாத அரசுகள் எல்லாம் அந்த நோயின் குணங்குறிகளுக்குத்தான் மருத்துவம் செய்கின்றனவே ஒழிய, நோயின் மூலமான காரணத்துக்கு அல்ல.

மிகக் கொடூரமான பயங்கரவாதத் சட்டத்தை நடைமுறைப்படுத்தியதில் இருந்து, இஸ்லாமிய பாட நூல்களை விலக்கிக் கொண்டமை வரை அரசுகள் எடுத்த நடவடிக்கைகள் நோயின் குணங்குறிக்கான சிகிச்சைகளேயன்றி, நோயின் மூல காரணத்துக்கான சிகிச்சைகள் அல்ல.

இந்த நாட்டில் இனப்பிரச்சினைகள், மதப் பூசல்கள் போன்ற நெருக்கடிகளுக்குப் பிரதான காரணம் – அடிப்படை – பௌத்த, சிங்களப் பேரினவாதம் என்ற மேலாதிக்கத் திமிர்தான்.

அந்த அடக்கு முறையின் – ஆக்கிரமிப்பின் – பேரினவாத மதவெறித் திணிப்பின் – பிரதிபலிப்பாகவே ஏனைய சிறுபான்மை இனத்தவரினதும், மதத்தவரினதும் சீற்றம் பெரும் ஆவேசமாக – தீவிரவாதமாக – சற்று மோசமானால் ‘பயங்கரவாத’மாக – வெளிப்படுகின்றது.

பௌத்த, சிங்களப் பேரினவாத அடக்கு முறையை – ஆக்கிரமிப்பை – மேலாண்மைப் போக்கை – நிறுத்தி, கைவிட்டு, நீதி, நியாயமான முறையில் செயற்படுவதற்கு இலங்கை அரசு தயாராகாத வரையில், நாட்டில் இனவாதமும் தீவிரவாதமும் பயங்கரவாதமும் துளிர் விட்டுக் கொண்டே இருக்கும்.

அரசு என்ன பதிலடி நடவடிக்கை மேற்கொண்டாலும், அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க – பௌத்த, சிங்கள பேரினவாத அரசும் அதன் பௌத்த, சிங்கள அரசியல் தலைவர்களும் இணங்காத வரையில் – தீவிரவாதமும், அரசு கூறும் பயங்கரவாதமும், இனவாதமும் இந்த மண்ணில் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும். அது தவிர்க்க முடியாததாகவும் இருக்கும்.

# எந்தப் பயணத் தடைகளும் எனக்கு விதிக்கப்படவில்லை!

## ரஞ்சன் ராமநாயக்க தெரிவிப்பு



குடியகல்வுத் திணைக்களத்தின் கணிணி வலையமைப்பில் ஏற்பட்ட முறைமை பிழையால் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வியாழக்கிழமை இரவு தாம் தடுத்து நிறுத்தப்பட்டதாக சுட்டிக்காட்டிய ரஞ்சன் ராமநாயக்க, நேற்று அமெரிக்கா செல்வதற்கான அனுமதியைப் பெற்றதாக தெரிவித்துள்ளார்.

வியாழன் இரவு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த முன்னாள் இராஜாங்க அமைச்சரை நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்காது குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் திருப்பி அனுப்பினர் எனத் திணைக்களப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பாக நேற்று (வெள்ளிக்கிழமை) ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தனக்கு எந்த பயணத் தடையும் விதிக்கப்படவில்லை என்று தனது வழக்கறிஞர்கள் உறுதியளித்ததைத் தொடர்ந்தே தான் அமெரிக்காவிற்கும் கனடாவிற்குமான பயணத்தைத் திட்டமிட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் குடியகல்வு திணைக்களத்தின் கணிணி வலையமைப்பு புதுப்பிக்கப்படவில்லை என்பதே பிரச்சினையாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சித்த விசேடசிகிச்சை கட்டண பிரிவு மருந்து விற்பனை நிலையம் திறப்பு!

## அச்சுவேலி மாவட்ட வைத்தியசாலையில்





அச்சுவேலி செல்வநாயகபுரம் பகுதியில் அமைந்துள்ள மாவட்ட சித்த வைத்தியசாலையில், சித்த விசேட சிகிச்சை கட்டண பிரிவும் ருந்து விற்பனை நிலையமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநரின் வழிநடத்தலில் உருவாக்கப்பட்ட இவை, நேற்று (வெள்ளிக்கிழமை) உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த சிகிச்சை நிலையத்தில் நோயாளர்கள் கட்டணம் செலுத்தி தங்களுடைய சேவைகளை பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் ஆயுர்வேத மருந்துகளையும் வாங்கிச் செல்ல முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன கலந்து கொண்டிருந்தார்.

மேலும், சிறப்பு விருந்தினர்களாக மாகாண ஆணையாளர் மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் நிலையத்தின் ஆர்.குருபரன், சான்று பெற்ற பாடசாலையின் அதிபர் எஸ்.புவனேந்திரன், அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் பிரபாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# மன்னாரில் தெரிவுசெய்யப்பட்டுள்ள விவசாயிகளுக்கு மேட்டுநில பயிர் செய்கைக்கான தானியம் வழங்கல்!

மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு உளுந்து, பயறு உள்ளிட்ட மேட்டு நில பயிர் செய்கைக்கான தானியங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கிராமிய பொருளாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் மேட்டுநில பயிர் செய்கைக்கான தானியங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 10 மணியளவில் நானாட்டான் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இதற்காக 860 விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்ட நிலையில், நேற்று முதற்கட்டமாக நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 40 விவசாயிகளுக்கு மேட்டு நில பயிர் செய்கைக்கான உளுந்து பயறு வழங்கி வைக்கப்பட்டது.

நானாட்டான் பிரதேச செயலாளர் எஸ்.கிறிஸ்கந்தகுமார் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் கலந்துகொண்டு தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு மேட்டு நில பயிர் செய்கைக்கான உளுந்து, பயறு போன்ற தானியங்களை வழங்கி வைத்தார்.

இந்;த நிகழ்வில், மாவட்ட விவசாய பணிப்பாளர் மற்றும் பயனாளிகள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



# பிலிப்பைன்ஸைப் புரட்டிப் போட்டது 'நால்கே' புயல்; இதுவரை 31பேர் பலி







மணிலா, ஒக்.29

பிலிப்பைன்ஸின் தென்பகுதி மாகாணங்களைத் தாக்கிய நால்கே புயல் மற்றும் அதனைத் தொடர்ந்து பெய்த கடும்மழை, வெள்ளம் ஆகியவற்றில் சிக்கி 31பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்கிழக்கு ஆசிய நாடான பிலிப்பைன்ஸை ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 20 புயல் மற்றும் சூறாவளிகள் தாக்குகின்றன. இவற்றால் வருடம் முழுவதும் பல சேதங்களை பிலிப்பைன்ஸ் மக்கள் அனுபவித்து வருகின்றனர். இந்தச் சூழலில்ப ருவநிலை மாற்றத்தால் உலகம் வெப்பமடைந்து வருவதன் எதிரொலியாக்ச் பிலிப்பைன்ஸை தாக்கும் புயல்கள் அதிக சக்தி வாய்ந்தவையாக மாறுவதாக விஞ்ஞானிகள் எச்சரித்து வருகின்றனர்.

இந்த நிலையில் பிலிப்பைன்ஸ் நாட்டின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள மாகாணங்களை 'நால்கே' என்கிற சக்தி வாய்ந்த புயல் நேற்றுத் தாக்கியது. குறிப்பாக இந்த புயல் அங்குள்ள மகுயிண்டனாவ் மாகாணத்தை புரட்டிப் போட்டது. மணிக்கு பல கி.மீ. வேகத்தில் சூறாவளி காற்று சுழன்று அடித்ததில் நூற்றுக்கணக்கான மரங்களும், மின்கம்பங்களும் சரிந்தன. கட்டடங்களின் மேற்கூரைகள் பல மீட்டர் தூரத்துக்கு தூக்கி வீசப்பட்டன, வீதிகளில் வாகனங்களும் பாதிப்புக்குள்ளாகின.

மேலும், புயலைத் தொடர்ந்து பலத்த காற்றுடன் இடைவிடாது பெய்த மழையால் மகுயிண்டனாவ் மாகாணத்தின் பல்வேறு நகரங்கள் வெள்ளக்காடாகின. குடியிருப்பு பகுதிகளை வெள்ளம் சூழந்ததால் நூற்றுக்கணக்கான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின. புயல் மழையை தொடர்ந்து பல இடங்களில் பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதில் ஏராளமான வீடுகள் மண்ணோடு மண்ணாக புதைந்தந. வீதிகளில் பாறைகள் உருண்டு விழுந்தன என்றும் கூறப்படுகின்றது.

இதனிடையே புயல், மழை மற்றும் வெள்ளம் தொடர்பான சம்பவங்களில் இதுவரை 31பேர்பலியாகியுள்ளனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் பலரைக் காணவில்லை என்பதனால் பலி எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. வெள்ளம் பாதித்த பகுதிகளில் சிக்கியிருக்கும் மக்களை மீட்கும் பணியில் இராணுவம் களமிறக்கப்பட்டு முழுவீச்சில் மீட்பு பணிகள் நடந்து வருகின்றன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுவரை 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என அவர்கள் கூறியுள்ளனர்.

## பெற்றோல், டீசல் வாகனங்களுக்கு வருகின்றது தடை: ஐரோப்பிய ஒன்றியம் ஒப்பந்தம்..!!



பரிஸ், ஒக்.29

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் 2035ஆம் ஆண்டு முதல், பெட்ரோல் மற்றும் டீசல் கார்களின் விற்பனையை தடை செய்யும் சட்டத்தின் படி புதிய ஒப்பந்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

மின்சார வாகனங்களுக்கு மாறுவதை விரைவுபடுத்தவும், பருவநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடவும் ஐரோப்பிய ஒன்றியம் ஓர் உடன்படிக்கையை மேற்கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் படி, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் கார் தயாரிப்பாளர்கள் தாங்கள் தயாரிக்கும் வாகனங்களில் இருந்து

வெளியாகும் 'கார்பன் டை ஆக்சைட்' வாயு வெளியேற்றத்தை 2035க்குள் 100 சதவீதம் குறைக்க வேண் டும். அதாவது 2035ஆம் ஆண்டுக்குள் கார்பன் வெளி யேற்றத்தை முற்றிலும் இல்லா மல் சாத்தியமாக்கும் இலக்கை அடைய வேண்டும். என்று குறிப்பிடப்பட் டுள்ளது.

அதேபோல, 2030ஆம் ஆண்டு முதல் விற்பனைக்கு வரும் கார்களில் இருந்து வெளியாகும் 'கார்பன் டை ஆக்சைட்' வாயு வெளியேற்றத்தை 55 சதவீதம் அளவுக்கு குறைக்க வேண்டும். இந்த ஒப்பந்தத்தை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், ஐரோப்பிய ஆணையம் மற்றும் ஐரோப்பியநாடாளுமன்றத்தின் உறுப்பினர் கள்ஒப்புக்கொண்டுள்ளனர்.

இதன்மூலம், ஐரோப்பிய ஒன்றியத்தை சேர்ந்த 27 நாடுகளிலும் 2035ஆம் ஆண்டுமுதல் பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருட்கள் மூலம் இயக்கப்படும் கார்கள்விற்பனை முடிவுக்கு வரும் எனக் கூறப்படுகின்றது. புதிய சட்டங்களைஉருவாக்கும் ஐரோப்பிய ஆணையம், மற்றும் அந்த சட்டங்களை அங்கீகரிக்கும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐரோப்பிய நாடாளுமன்றம் இந்த ஒப்பந்தத்தின் படி செயல்பட தீர்மானித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



## சாம்சங் புதிய தலைவர்

தென்கொரியாவை தலைமையிடமாக கொண்டு இயங்கும் பிரபல பன்னாட்டு நிறுவனமான சாம்சங் தொலைபேசிகள், தொலைக்காட்சிகள், குளிரூட்டிகள் உள்ளிட்ட மின்சாதன பொருள்கள் விற்பனையில் முன்னணியில் உள்ளது. இந்த நிலையில் இந்த நிறுவனத்தின் செயல் தலைவராக லீ ஜே யோங் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இவர் சாம்சங் நிறுவனத்தை நிறுவிய லீ பியுங் பங் குடும்பத்தை சேர்ந்த மூன்றாவது தலைமுறை நபராவார். 54 வயதான லீ ஜே யோங் கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் சாம்சங் நிறுவனத்தின் துணை தலைவராக இருந்து வருகிறார்.

ஜே ஒய் லீ என்றும் அழைக்கப்படும் லீ ஜே யோங் ஊழல் வழக்கில் சிக்கி சிறை தண்டனை அனுபவித்த நிலையில் தென் கொரியா அரசு கடந்த ஆவணி மாதம் அவருக்கு பொதுமன்னிப்பு வழங்கி அவரை வழக்கில் இருந்து விடுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


## ஈரான் ஷியா முஸ்லிம்கள் மீது துப்பாக்கிச் சூடு; 15 பேர் பலி

டெஹ்ரான், ஒக்.29

ஈரானில் வழிபாட்டு தலத்தில் பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கி சூட்டில்15 பேர் பலியாகியுள்ளனர்.

ஈரான் நாட்டின் தென்மத்திய பகுதியில் அமைந்துள்ள ஷிராஸ் நகரில் ஷியா பிரிவு முஸ்லிம்களின் வழிபாட்டு தலம் உள்ளது. நேற்று முன்தினம் இரவு இந்த வழிபாட்டு தலத்தில் ஏராளமான ஷியா பிரிவு முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு காரில் வந்த பயங்கரவாதிகள் சிலர் வழிபாட்டு தலத்தின் நுழைவாயிலில் நின்று கொண்டிருந்தவர்கள் மீது சரமாரியாகய் துப்பாக்கி யால் சுட்டனர். இதனால் அங்கு பெரும் பதற்றம் உருவானது.

வழிபாட்டு தலத்தில் இருந்த பெண்கள், சிறுவர்கள் உள்பட அனைவரும் உயிர் பயத்தில் அலறியபடி அங்கும், இங்குமாக ஓடிய நிலையில், அந்த பயங்கரவாதிகள் துப்பாக்கியால் சுடுவதை நிறுத்தவில்லை. இதில் 50 பேருக்கும் அதிகமானோர் உடலில் துப்பாக்கி குண்டுகள் துளைத்து இரத்த வெள்ளத்தில்சரிந்தனர்.



அவர்களில் சிறுவர்கள் உள்பட 15 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.


இதனிடையே இந்த துப்பாக்கி சூடு குறித்த தகவல் கிடைத்ததும் பொலிசார் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று அந்த பகுதியை சுற்றி வளைத்து தங்களின் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டுவந்ததுடன், துப்பாக்கிசூட்டில் ஈடுபட்ட 3 பயங்கரவாதிகளில் 2 பேரை பொலிசார் மடக்கி பிடித்து கைது செய்தனர். மற்றொருவர் பொலிஸாரிடம் சிக்காமல் தப்பி ஓடிவிட்டார்.

இதையடுத்து, பயங்கரவாதிகளின் துப்பாக்கி சூட்டில் படுகாயம் அடைந்த சுமார் 40 பேரை பொலிஸாத் மீட்டு சிகிச்சைக்காக அருகில் உள்ள வைத்தியசாலையில் சேர்த்தனர்.

அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் என அஞ்சப்படுகிறது.

# டெல்லி – பெங்களூர் விமானத்தில் திடீர் தீ! விசாரணைகள் ஆரம்பம்!





புதுடெல்லி, ஒக்.29

டெல்லியில் இருந்து பெங்களூருக்குப் புறப்பட்ட இண்டிகோ விமானத்தின் இறக்கை திடீரென்று தீப்பிடித்ததால், டெல்லி விமான நிலையத்திலேயே விமானம் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

அந்த விமானத்தின் என்ஜினில் ஒரு பகுதி தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தீப்பிடித்ததாக விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

விமானம் உடனடியாக தரையிறக்கம் செய்யப்பட்டு, 177 பயணிகள் மற்றும் 7 பணியாளர்கள் அனைவரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். அத்துடள் அவர்கள் அனைவருக்கும் மாற்று விமானம் ஏற்பாடு செய்யப்பட்டதாக விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், விமானத்தின் என்ஜினில் தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணத்தை கண்டறிய சிவில் விமான போக்குவரத்து இயக்குநரகம் தீவிர விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக சிவில் விமான போக்குவரத்து இயக்குநரகம் உரிய நடவடிக்கை எடுக்குமாறு விமான போக்குவரத்து அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது

# ஒன்லைன் ரம்மிக்கு விதித்த தடைக்கு ஆளுனர் ஒப்புதல்; விரைவில் சட்டம்!



சென்னை, ஒக்.29

சென்னை தலைமைச் செயலகத்தில் கடந்த செப்டம்பர் மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற தமிழக அமைச்சரவை கூட்டத்தில், 'ஒன்லைன்' சூதாட்டத்துக்குத் தடை விதிக்கும் அவசர சட்டத்திற்கு மசோதா கொண்டுவருவது குறித்து விவாதிக்கப்பட்டது.

இதையடுத்த, ஒன்லைன் ரம்மி தடைக்கான அவசர சட்டத்துக்கு தமிழக அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதன் பின்னர், ஆளுநரிடம் ஒப்புதல் பெறப்பட்டு விரைவில் சட்டம் பிரகடனப்படுத்தப்படும் என்று தமிழக அரசு அறிவித்தது.

மேலும், பொதுமக்களிடம் கேட்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், சட்டத்துறையின் ஆலோசனை பெற்று அவசர சட்டம் தயாரிக்கப்படும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது. இந்நிலையில், தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டஒன்லைன் சூதாட்ட தடை மசோதாவுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளார்.

தடையை மீறி ரம்மி உள்ளிட்ட ஒன்லைன் சூதாட்ட விளையாட்டில் ஈடுபடும் நபர்களுக்கு 3 மாதங்கள் சிறை அல்லது ரூ.5 ஆயிரம் அபராதம் விதிக்கப்படவுள்ளது. தமிழகத்தில் கடந்த சில மாதங்களில் ஒன்லைன் சூதாட்ட விளையாட்டுகளில் பணத்தை இழந்து இளைஞர்கள் பலர் தற்கொலை செய்துக்கொண்ட சம்பவங்கள் அதிகரித்து வந்தன. இதையடுத்து, தமிழகத்தில் ஒன்லைன் விளையாட்டுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகிலேயே மிக உயரமான சிவன் சிலை ராஜஸ்தானில் இன்று திறக்கப்படுகின்றது





ஜெய்ப்பூர், ஒன்.29

ராஜஸ்தான் மாநிலம் ராஜசமந்த் மாவட்டத்தில் உள்ள நத்வாரா நகரில், 'விஸ்வஸ்ரூபம்' என்று அழைக்கப்படும் பிரமாண்ட சிவன் சிலை இன்று (சனிக்கிழமை) திறந்து வைக்கப்படுகின்றது. 369 அடி உயரமுள்ள இந்தச் சிலை, உலகிலேயே உயரமான சிவன் சிலையாக கருதப்படுகிறது.

ராஜஸ்தானின் பிரபல சுற்றுலாத்தலமான உதயப்பூரில் இருந்து 45 கி.மீ. தொலைவில், ஒரு குன்றின் மீது இந்த சிலை அமைக்கப்பட்டிருக்கிறது. தத் பதம் சன்ஸ்தான் என்ற அமைப்பு இந்த சிலையை அமைத்திருக்கிறது. தியானநிலை தோற்றத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த சிவன் சிலையை 20 கிலோமீட்டர் தொலைவில் இருந்து கூட பார்க்க முடியும் என்று கூறப்படுகிறது. இரவிலும் இந்தச் சிலையை காணக்கூடிய வகையில் ஒளி வெள்ள விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சிலைக்குள் அமைக்கப்பட்டுள்ள 4 லிப்டுகள், 3 வரிசை படிக்கட்டுகள் மூலம் பக்தர்கள் உள்ளே சென்றும் பார்க்கலாம். இங்கு ஒரு அரங்கும் அமைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 3 ஆயிரம் தொன் உருக்கு மற்றும் இரும்பு,கொன்கிறீட் மற்றும் மணல் ஆகியவற்றை பயன்படுத்தி, 10 ஆண்டுகளில் இந்த சிலை கட்டப்பட்டிருக்கிறது. சுமார் 250 ஆண்டுகள் நீடிக்கும் வகையிலும், 250 கி.மீ. வேகத்தில் வீசும் காற்றை தாங்கும் வகையிலும் இந்த சிவன் சிலை அமைக்கப்பட்டுள்ளமை சிறப்புக்குரியதாகக் கூறப்படுகின்றது.

கடந்த 2012 ஆம் ஆண்டு ஆவணி மாதம் இந்த சிலை அமைப்பு பணியை ராஜஸ்தான் முதலமைச்சர் அசோக் கெலாட் தொடங்கிவைத்தார். இன்று அவரது முன்னிலையில், சிவன் சிலை திறந்து வைக்கப்படுகிறது.

சட்டசபை சபாநாயகர் சி.பி.ஜோஷி உள்ளிட்டோர் இந்நிகழ் வில் பங்கேற்கின்றனர். இந்த சிலை அமைந்துள்ள பகுதியைச் சுற்றிலும், சுற்றுலா பயணிகள் உற்சாகமாக பொழுதை கழிக்கும் வகையில் சாகச சுற்றுலா வசதிகள் போன்றவையும் ஏற்படுத்தப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குர்ஆனை தண்ணீரில் வீசிய நபர் கைது அவர் மனநலம் குன்றியவர் எனத் தகவல்

ஸ்ரீநகர், ஒக்.29

ஜம்மு காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகர் மாவட்டத்தில் உள்ள கோஜ்வாடா பகுதியில் திருக்குர்ஆனை தண்ணீரில் வீசிய குற்றச்சாட்டில் இர்ாத் அகமது மிர் என்ற நபர் இரவோடு இரவாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மேலும்,இவ்வாறு கைது செய்யப்பட்ட குறித்த நபர் மனம்நலம் பாதிக்கப்பட்டவர் என்று ஸ்ரீநகர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக நவ்வட்டா காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. முஸ்லீம் மதத்தின் புனித நூலான திருக்குர்ஆனைப் புண்படுத்துவது கடுமையான குற்றமாகக் கருதப்படுகின்ற நிலையில், குர்ஆனின் புனிதத்தன்மை அவமதித்ததன்



காரணமாக, மத நல்லிணக்கம் மற்றும் அமைதி சீர்குலைவு ஏற்படும் அபாயம் உள்ளதாகக் கூறப்பட்டதுடன், குரானை அவமதித்ததால் தான் பல இடங்களில் கலவரம் நடந்துள்ளது. எனவே, திருக்குர்ஆனைப் புண்படுத்திய இந்த சம்பவத்திற்கு காரணமான நபரை உடனடியாகக் கைது செய்யுமாறு ஜம்மு காஷ்மீர் காவல்துறைக்கு கடும் அழுத்தம் கொடுக்கப்பட்டிருந்தது.

மேலும், அவமதித்த நபர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், இந்தச் சம்பவத்தின் போர்வையில் சமூக விரோதிகள் இடையூறு ஏற்படுத்தக்கூடும் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், குற்றம் சாட்டப்பட்ட இர்ாத் அகமது மிர், இரவோடு இரவாக பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

# கோணேஸ்வரர் பூமி ஆக்கிரமிப்புக்கு நிந்தவூர் பிரதேச சபையும் கண்டனம்



(கே.எ.ஹமீட்)

நிந்தவூர் பிரதேச சபையின் 55 ஆவது சபை அமர்வு நேற்று முன்தினம் நிந்தவூர் பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தவிசாளர் எம்.ஏ.எம். அஸ்ரப் தாஹிர் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது சபையின் வழமையான நடவடிக்கைகளை தொடர்ந்து சபையின் உறுப்பினர் திருமதி சுதாமதி திருகோணமலை திருகோணேஸ்வரம் ஆலயத்தின் புராதன அடையாளங்களைப் பாதுகாப்பது மற்றும் ஆலயத்தின் அபிவிருத்தி செயற்பாடுகள் போன்ற விடயங்களை முடக்கும் வகையிலான செயற்பாடுகள் திட்டமிட்ட பேரினவாத குழுக்களினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையை கண்டித்து கண்டனப் பிரேரணையொன்றை சபையில் முன்வைத்தார். தொடர்ந்து அந்தப் பிரேரணையின் பிரகாரம் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதே போல நிந்தவூர் பிரதேசத்தில் இடம்பெற்று வருகின்ற கடலரிப்பினை தடுப்பதற்கான நிரந்தர தீர்வு நோக்கிய நகர்வில் கட்சி பேதங்களின்றி நிந்தவூர் பிரதேச சபை செயற்பட்டுவருகின்ற இச்சந்தர்ப்பத்தில், நிந்தவூர் பிரதேச சபையின் உதவித் தவிசாளர் தான் சார்ந்த அரசிடம் முன்வைத்த கோரிக்கையின் பிரகாரம் முதற்கட்டமாக 65 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான விலைமனுவும் பத்திரிகைகளில் கோரப்பட்டுள்ளது, இந்த விடயத்தைத் தான் செய்தார் என அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் முர்ஷரப் முதுநபீன் முற்றிலும் பொய்யான வதந்திகளை சமூகவலைத்தள ஊடகங்களில் பரப்புகின்றமையை சபை வன்மையாக கண்டிப்பதாக பிரேரணை ஒன்று அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டது. அகில இலங்கை மக்கள் காங் கிரஸ், சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் சிறி லங்கா சுதந்திர கட்சி ஆகிய கட்சிகளின் உறுப்பினர்களினால் ஏகமனதாக இந்தக் கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## கட்டடங்கள், பாதைகள் அமைப்பதை விடுத்து

# பாதிப்புற்ற பொதுமக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்களை முன்னெடுங்கள்!

## கிழக்கு ஆளுநர் கண்டிப்பான உத்தரவு



(ஹஸ்பர்)

வெளிநாட்டு உதவியின் கீழ் பெறப்படும் பணத்தில் கட்டடங்கள் மற்றும் வீதி நிர்மாணப் பணிகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நிறுத்தப்பட வேண்டும் என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மாகாண அதிகாரிகளிடம் வலியுறுத்தினார்.

அந்த பணத்தின் மூலம் நாட்டில் பல தேவையற்ற கட்டடங்கள் கட்டப்பட்டு அவை உரிய முறையில் பயன்படுத்தப்படுவதில்லை எனவும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் நடந்துள்ள ஒரே பலன் கட்டுமான ஒப்பந்தகாரர்களை வளப்படுத்துவது மட்டுமே எனவும் தெரிவித்தார்.

திருகோணமலையில் உள்ள ஆளுநரின் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை மாலை உலக வங்கியின் உதவியுடன் கிழக்கு மாகாணத் தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பில் உலக வங்கி பிரதிநிதிகளுடனான விசேட சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த ஆளுநர் –

உலக வங்கி உதவியின் கீழ் பெறப்பட்ட நிதியில் மிகவும் வசதியான திட்டங்களை முன்கொண்டு செல்ல வேண்டும். கட்டுமானத்திற்கு பின் செல்ல வேண்டாம். எங்கிருந்தோ பணம் வரும்போது கட்டடம் கட்டவோ, பாதை அமைக்கவோ, கொங்ரீட் பாதை, காபட் பாதை அமைக்கவே பழகிவிட்டோம். இதுவரை அப்படித்தான் செய்து வந்தோம். இவற்றின் விளைவுகளை நாம் இப்போது பெற்றுள்ளோம். எனவே இனிமேல் அதை செய்யாதீர்கள் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்கள் பல உள்ளன. இதுபோன்ற திட்டங்களுக்கு விரைவில் செல்லுங்கள்," என, அங்கிருந்த உள்ளூராட்சி அமைப்புகளின் தவிசாளர்களிடம் மேலும் கூறினார்.

இதில் பிரதம செயலாளர் ஆர்.எம்.எஸ்.பிரத்நாயக்க, முதலமை அமைச்சின் செயலாளர் கலாமதி பத்மராஜா, ஆளுநரின் செயலாளர் எல்.பி. மதநாயக்க, உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.மணிவண்ணன், உலக வங்கியின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி நிறுவனங்களின் தவிசாளர்கள் உள்ளிட் டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# மாற வேண்டியது உள்ளமே பாடப் புத்தகங்கள் அல்ல!

## கிண்ணியா மஹ்தி அரசுக்குச் சாட்டை

(ஹஸ்பர்)



பாடசாலைகளில் இலவசமாக வழங்கப்படுகின்ற இஸ்லாம் பாட புத்தகங்களில் மாற்றம் செய்வதற்கு முன்னர் கடும்போக்குவாதிகளின் உள்ளங்களில் மாற்றம் வர வேண்டும் என கிண்ணியா நகரசபை உறுப்பினர் எம்.எம்.மஹ்தி தெரிவித்துள்ளார்.

இன்று வெளியிடப்பட்ட தமது ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:–

இஸ்லாம் பாடப் புத்தகங்களில் அடிப்படை வாதக் கருத்துக்கள் உள்ளன எனவும், அவை நீக்கப்பட வேண்டும் எனவும் !ஒரே நாடு; ஒரே சட்டம்' செயலணி பரிந்துரை செய்தது.

அதற்கு அமைவாக இஸ்லாம் பாட புத்தகங்களை அரசு மீளப் பெற்றமை தலை வலிக்கு காலில் மருந்து கட்டுவது போன்றதாகும். இதனால் மாணவர்களின் கல்வியே பாதிப்படைந்தது. ஈஸ்பர்தாக்குதலைவைத்து முஸ்லிமக ளுக்கு இழைக்கப் பட்ட அநியா யங்கள் கொஞ்ச நெஞ்சமல்ல. ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகள் வெளிப்படுத்தப் பட்டிருந்தால் இஸ்லாம் பாட புத்தகங்களை மீளப்பெற வேண்டிய தேவை வந்திருந்திருக்காது.

எனவே முஸ்லீம் மாணவர்களின் கற்கும் உரிமையை பறிக்காமல் புத்தகங்களை தாமதமின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். – எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.



# கல்முனை வைத்தியசாலையில் நவபோஷா விநியோக நிகழ்வு

( வி.ரி சகாதேவராஜா)



ஐக்கிய ராஜ்ஜியத்தில் அமைந்துள்ள மட்டக்களப்பு நலிவுற்றோர் அபிவிருத்தி சங்கம் (BUDS. UK) மற் றும் மட்டக்களப்பு மருத்துவமனைகளின் நண்பர்கள் சங்கம்(ய்நுயகூஷிஷீலு)என்பவற்றின் நிதிப்பங்களிப்பில் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் 5 வயதுக்குட்பட்ட ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு 'நவபோச' சத்துமா வழங்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை கல்முனை ஆதாரவைத்தியசாலைஒன்றுகூடல் மண்டபத்தில் ஆதாரவைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ந.ரமேஸ், உதவி வைத்திய அத்தியட்சகர் டாக்டர்ஜெ.மதன், குழந்தை நல மருத்துவ நிபுணர் டாக்டர் பிறேமினி மற்றும் நிதிப்பங்களிப்பு வழங்கிய அமைப்புக்களின் பிரதிநிதி கிறிஸ்ரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கல்முனை பிராந்தியத் தாய்மார்களுக்கான சத்துமா பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

# சிறுவர் – பெண்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்துவது குறித்த கருத்தமர்வு மன்னாரில்!



மன்னாரில் அதிகரித்து வரும் சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை எவ்வாறு கட்டுப்படுத்துவது மற்றும் கையாள்வது தொடர்பான கருத்தமர்வொன்று நடைபெற்றது.

இந்தக் கருத்தமர்வு நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 10 மணியளவில் மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சிறுவர் மற்றும் பெண்களுக்கு ஏற்படும் வன்முறைகளை தடுப்பது மற்றும் சிறுவர் பெண்களுக்கு ஏற்படும் வன்முறை சம்பவங்களை எவ்வாறு கையாள்வது தொடர்பான கருத்துக்கள் இளைஞர், யுவதிகளுக்கு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளைக் கையாளும் பொலிஸ் உத்தியோகத்தர்கள், மெசிடோ நிறுவனத்துக்கான யுனெப்ஸ் திட்ட இணைப்பாளர் ஜான்சன் சூசை, மன்னார் மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட இளைஞர், யுவதிகள் மற்றும் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

## தேசிய ரீதியான போதைப் பொருள் விழிப்புணர்வுச் செயற்திட்டம் யாழ் பல்கலை கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் முன்னெடுப்பு!

யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் பாடசாலை மாணவர்களுக்கான தேசியரீதியான வழிகாட்டல் மற்றும் போதைப் பொருள் விழிப்புணர்வுசார் செயற்றிட்டம் நேற்று (வெள்ளிக்கிழமை) யாழ்ப்பாணம் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் அங்குரார்ப்பனம் செய்து வைக்கப்பட்டது.

நாட்டில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனை மற்றும் அதிகரித்து வரும் பாடசாலை மாணவர்களின் இடைவிலகல்களைத் தவிர்பதற்கும் மாணவர்களிடையே விழிப்புணர்வூட்டுமுகமாக இந்த செயற்றிட்டத்தின் ஆரம்ப கட்டமாக நேற்று யாழ்ப்பாணம் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய மாணவர்களுக்கு இந்தச் செயற்திட்டம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்த செயற்றிட்டம் வடக்கு,கிழக்கு,மலையகம் தழுவிய பாடசாலைகளை அடிப்படையாக கொண்டு எதிர்காலத்தில் முன்னெடுக்கபடவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் பயிற்சி பெற்ற மாணவ ஆளணியினரால் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணத்தில் மாணவர்களை இலக்கு வைத்து போதை மாத்திரை வியாபாரத்தில் ஈடுபட்டவர் கைது!



தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதை மாத்திரை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் நேற்று (வெள்ளிக்கிழமை)பொலிஸாரல் கைது செய்யப்பட்டுள்ளார்.

மல்லாகம் கோணப்புலம் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய சந்தேக நபர் போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரை பொலிஸ் நிலையத்தில்தடுத்துவைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ஒன்றரை வருடங்களாக தலைமறைவாக இருந்த வாள்வெட்டு சந்தேக நபர் உரும்பிராயில் கைது!

யாழ்ப்பாணம், உரும்பிராய் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த நபர் ஒருவர் 16 மாதங்களின் பின்னர் நேற்று (வெள்ளிக்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்.

கோண்டாவில் செல்வபுரம் பகுதியில் இருந்த கலையகம் ஒன்றினுள் கடந்த 2021ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதி அத்துமீறி நுழைந்த வன்முறை கும்பல் ஒன்று , அங்கிருந்த 06 பேர் மீது வாள் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டு, அங்கிருந்த வாகனம் மற்றும் கலையகத்துக்கும் தீ வைத்தது.

மேற்படி சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் பிரதான சந்தேக நபராக அடையாளம் காணப்பட்ட நபர் கடந்த ஒன்றரை வருடங்களாகத் தலைமறைவாக இருந்த நிலையில் , யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் இணுவில் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபர் 26 வயதுடையவர் எனவும், கோப் பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## மண் ஏற்றி வந்த உழவு இயந்திரத்தில் இருந்து மன்னாரில் கண்ணிவெடி

மன்னார் – மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாப்பாமோட்டை பகுதியில் இருந்து மன்னார் நகரில் உள்ள சாவக்கட்டு மயானப் பகுதிக்கு மண் ஏற்றி வந்த உழவு இயந்திர பெட்டிக்குக்குள் மண்ணுடன் வெடிக்காத நிலையில் கண்ணிவெடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த இடத்தில் வேலை செய்த நபர் ஒருவரால் கண்ணிவெடி உள்ளமை கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் இந்த விடயம் தொடர்பாக உடனடியாக மன்னார் பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. சம்பவ இடத்துக்கு சென்ற மன்னார் பொலிஸார் மேற்படி பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர். மேலும் நீதிமன்றத்தின் உத்தரவு பெற்று விசேட அதிரடிப்படையின் தலைமையில் கண்ணிவெடி செயலிழக்கச் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# பல்வேறு கலை, கலாசார நிகழ்வுகளுடன் நாவிதன்வெளி பிரதேச இலக்கிய விழா







(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கலாசார அலுவலர்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நாவிதன்வெளி பிரதேச செயலகம் இணைந்து நடாத்திய பிரதேச கலை இலக்கிய விழா, பிரதேச செயலாளர் எஸ் ரங்கநாதன் தலைமையில் நேற்று முன்தினம் நாவிதன்வெளி கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட பதில் அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். உதவி பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன், நாவிதன்வெளி கோட்டக்கல்வி பணிப்பாளர் திருமதி என்.நிதர்ஷினி மகேந்திரகுமார், பிரதேச செயலக கணக்காளர் கே.றிஸ்வி யஹ்சர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் இ. லதாகரன், நிர்வாக உத்தியோகத்தர் கே. யோகேஸ்வரன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.றிம்ஸான் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் போது பிரதேச மட்ட கலை இலக்கியப் போட்டித் தொடரில் வெற்றி பெற்ற பாடசாலை மற்றும் திறந்த பிரிவு போட்டியாளர்கள் அதிதிகளினால் பரிசில்ககள், சான்றிதழ்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

நாவிதன்வெளி பிரதேச கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.எம்.ஷினாஸ் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த கலை, இலக்கிய விழாவில் இயல், இசை, நாடகம் என கலை, கலாசார நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன. இந்த நிகழ்வில் சமுர்த்தி முகாமையாளரும் சட்டத்தரணியுமான எம்.எம்.எம்.முபீன், சமூக செயற்பாட்டாளர்களான எம்.மஹ்ரூப், எம்.ஏ. நளீர் உட்பட பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், கலை மன்றங்களின் பிரதிநிதிகள், பிரதேச கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். நிகழ்வுகளை பிரதேச கலைஞரும், அறிவிப்பாளருமான குலசிங்கம் கிலேசன் தொகுத்து வழங்கினார்.

## பேராதனைப் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வழக்கில் பிரதானமவராக குற்றஞ்சாட்டப்பட்ட பாலேந்திரன் பிரசாத் சதீஸ்கரனின் இருப்பிடம் தெரியாத நிலையில் அவர் ஆரம்பம் முதலே மன்றில் முன்னிலையாக நிலையிலேயே அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

செல்வநாயகம் வரபிரகாஷ், முதலாம் ஆண்டு பொறியியல் மாண வராக இருந்தபோது, அவர் மீது மனி தாபிமானமற்ற வகையில் பகிடிவதை மேற்கொள்ளப்பட்டது.

1997 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி இந்த சம்பவம் இடம்பெற்று சிறிது காலம் சிகிச்சை பெற்று வந்த அவர் 1997 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி அவர், மரணமானார்.

சாட்சியங்களின்படி, பிரதான குற்றம்சாட்டப்பட்டவர்களும், பகிடிவதை யில் ஈடுபட்ட ஏனைய மாணவர்களும் பொறியியல் பீடத்தின் இரண்டாம் வருட மாணவர்களாவர்.

அரச தரப்பின் முதல் சாட்சி, இறந்த வரைப் பார்த்தபோது, அவர் கிட்டத்தட்ட நிர்வாணமாக இருந்தார் என்று கூறப்பட்டது. அத்துடன் (எழும்பு –இரு) என்ற உடற்பயிற்சியில் அவர் ஈடுபடுத் தப்பட்டிருந்தார்.

அத்துடன் அவர் பொறியியல் பீடத்தில் இருந்து இரண்டாம் ஆண்டு மாணவர்களின் இருப்பிடத்துக்கு (வீடு) அழைத்து செல்லப்பட்டே பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

இந்நிலையில் குற்றம் சாட்டப்பட்ட வர்களின் இரண்டு புகைப்படங்களைக் கொண்டு அவர்களைச் சிகிச்சை பெற்று வந்தபோது வரப்பிரகாஷ், அடையாளம் காட்டினார். இறந்தவரின் தந்தையான சிவகுரு செல்வவிநாயகன் பிரகான், தொழில் ரீதியாக ஒரு மருத்துவர்.

பிரேத பரிசோதனையின் போது, தசைக் காயம் காரணமாக ஏற்பட்ட கடுமையான சிறுநீரகச் செயலிழப்பு மரணத்துக்குக் காரணம் என்று சட்ட ம ருத்துவ அதிகாரி தெரிவித்தார்.

அவர் அதிக உடல் பயிற்சிக்கு உட் படுத்தப்பட்டதன் காரணமாகவே இறந் தவருக்கு உட்காயங்கள் ஏற்பட்டுள்ளன என்று அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

இதனைக் கொண்டு, மேன்முறை யீட்டு நீதிமன்றமும் கொலையைச் செய்ததற்காக குற்றம் சாட்டப்பட்டவர் தனது நடவடிக்கையைப் பற்றித் தேவையான அறிவைப் பெற்றிருந்தார் என்பதை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிப்பதற்கான போதுமான ஆதாரங்கள் இருப்பதாகக் குறிப்பிட்டது.

பாலேந்திரன் பிரசாத் சதீஸ்கரன் இந்த வழக்கில் முதல் பிரதிவாதியாக இருந்தபோதும், வழக்கின் ஆரம்பம் முதல் நீதிமன்றத்தில் அவர், முன் னிலையாகாதநிலையில், இந்தக் குற் றத்தைச் செய்ததாக எட்டு மாணவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது.

விசாரணை முடிவடைந்ததை யடுத்து, கண்டி நீதிவான் குற்றம் சாட்டப் பட்டவர்களில் மூவரை மேல் நீதிமன்றத் தில் விசாரணைக்கு பாரப்படுத்தினார்.

பின்னர், சட்டமா அதிபரின் அறிவு றுத்தலின் பேரில், அவர்களில் ஒருவர் சாட்சியங்கள் இல்லாத காரணத்தால் விடுவிக்கப்பட்டார். அத்துடன் பிரதான குற்றவாளியான பாலேந்திரன் பிரசாத் சதீஸ்கரன் உட்பட்ட இரண்டாவது குற்றவாளிகள் கண்டி மேல் நீதிமன் றத்தில் குற்றஞ்சாட் டப்பட்டனர்.

இதில் இரண்டாவது குற்றவாளி விசாரணையின் பின்னர் 2014இல் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து முக்கிய குற்றவாளி, நீதிமன்றில் முன்னிலையாகாத நிலையில் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. எனினும், அதனை ஆட்சேபித்து அவர், சட்டத்தரணி ஊடாகத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவின் மீது விசாரணையை மேற்கொண்ட மேன்முறையீட்டு நீதி மன்றமே, முக்கிய குற்றவாளிக்கான கண்டி நீதிமன்றத்தின் முன்னைய தீர்ப்பை உறுதிசெய்துள்ளது.

## தமிழருக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ராஜபக்ஷக்களின் சகாவான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளு மன்ற உறுப்பினர் ரோஹித அபே குணவர்த்தன.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் கேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டம் நாட்டு மக்களையும் சர்வதேசத் தையும் ஏமாற்றும் நாடகம். அதனால் தான் நான் உள்ளிட்ட 'மொட்டு'வின் ஒரு தொகுதியினர், அந்தச் சட்டம் மீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்ள வில்லை.

22 ஆவது திருத்தச் சட்டம் மீதான வாக்கெடுப்பு விவகாரத்தை வைத்துக் கொண்டு 'மொட்டு'வுக்குள் பிளவு என்று எவரும் தப்புக்கணக்குப் போடக்கூடாது.

'மொட்டு' அரசு இன்னமும் எழுச்சியுடன் பயணிக்கின்றது. தேர்தல் ஒன்று நடந்தால் அது நிரூபணமாகும்.

தமிழர் தீர்வுக்கான முதல் படியாகவே 22 ஆவது திருத்தச் சட்டத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்தது என்று ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உண்மையில் நான் கேட்கின்றேன் தமிழர்களுக்கு இந்த நாட்டில் என்ன பிரச்சினை உண்டு? தேசிய இனப் பிரச் சினை என்று அவர்கள் எதைக் கூறு கின்றார்கள்? தீர்வு என்று அவர்கள் எதை எதிர்பார்க்கின்றார்கள்?

இலங்கையின் 25 மாவட்டங்களிலும் தமிழர்கள் சுதந்திரமாக நடமாடு கின்றார்கள்; அனைத்து மாவட்டங் களிலும் அவர்கள் வசிக்கின்றார்கள். ஆனால், இந்தச் சுதந்திரம் சிங்களவர் களுக்கு இல்லை. வடக்கு, கிழக்கில் சிங் களவர்கள் சுதந்திரமாக வழிபடக்கூடிய நிலைமைகூட இல்லை – என்றார்.

## சிரேஷ்ட......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'கௌரி நீதியின் குரல்' என்ற புத்தகமும் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவைசேனாதிராஜா, இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், உள் ளூராட்சி சபைகளின் தலைவர்கள் – உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் – உறுப்பினர்கள் மற்றும் சட்டத்தரணிகள், கல்விச் சமூகத்தினர், சிவில் சமூகத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா, இலங்கை தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவரான ஜனாதி பதி சட்டத்தரணி கே.வி. தவராசாவின் பாரியாராவார். அவர் நாட்டில் அதிகம் பேசப்படுகின்ற பல வழக்குகளில் முன் னிலையாகி – வாதாடி சாதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 22ஆவது......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதைச் சாதிக்கப் போகின்றார்கள் என் பதைப் பகிரங்கமாகக் கூறவேண்டும்.

22 ஆவது திருத்தச் சட்டம் மூலம் நாட்டை மீளக்கட்டியெழுப்ப முடியாது. அனைவரும் ஓரணியில் சங்கமித்தால் தான் நாடு மீளெழுச்சி பெறும்

புதிய அரசமைப்பு கொண்டுவரப்பட வேண்டும். இந்த நிலைப்பாட்டில் நாம் உறுதியாக உள்ளோம். அதற்கு முன்னர் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண சகலரும் ஒன்றிணைய வேண்டும் – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

